வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண்.4835 /B3/2022 நாள் : 15.12.2022

பொருள் பள்ளிக் கல்வி – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் – 2022 – 2023 ஆம் கல்வியாண்டிற்கான இணைய தளம் விரைவில் செயல்பாட்டிற்கு வரவுள்ளதால் ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க – பள்ளிகள் அளவில் Scholarship Help Desk உருவாக்குதல் சார்பு

பார்வை 1.வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே6/1218/2022 நாள்.21.11.2022

-----

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு 2022 –2023 ஆம் கல்வி ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணைய வழியில் பதிவேற்றம் செய்யும்பொருட்டு இணையதளம் விரைவில் திறக்கப்படவுள்ளதால், கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் அளிக்க ஏதுவாக அனைத்து பள்ளிகளிலும் (Scholarship Help Disk) என்ற அமைப்பினை உருவாக்கி அதற்கு ஒரு பொறுப்பான நபரை நியமித்து அதன் விவரத்தினை வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலவலகத்திற்க்கு 19.12.2022 க்குள் தகவல் தெரிவிக்குமாறு அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.
1.மாவட்டக் கல்வி அலுவலர் ( தொடர் நடவடிக்கையின்பொருட்டு)
(இடைநிலைக் கல்வி) வேலூர்.9.

2.வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

ப.ரா.,